**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.360/2018 (Joint trial with OS 33/2019) வா.சா.2 சக்திவேல்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 03.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார் என்றால் நீதிமன்ற அழைப்பாணை வந்தது. வழக்கு சொத்தை இவ்வழக்கு வாதிக்கு நான் தான் கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் அது ஆதியில் என் தந்தைக்கு பாத்தியப்பட்டு அவர் இறப்பிற்கு பின் எனக்கும் என் சகோதர சகோதரிகளுக்கும் வாரிசு முறையில் பாத்தியப்பட்டது.

2) வா.சா. ஆ. 1 பாக ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் என் தந்தை பெயரில் சொத்து இருந்தது அவர் ஏற்பாடு ஏதும் செய்து வைக்காமல் இறந்து விட்டதால் நாங்கள் பாகம் பிரித்து கொண்டோம். என் தந்தை பெயரில் சொத்து இருந்ததற்கான ஆவணம் ஏதும் பார்த்துள்ளேனா என்றால் சிட்டா மட்டும் பார்த்துள்ளளேன். வா.சா. ஆ. 1 பாக ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் என் தந்தையின் வாரிசுகள் எங்களுக்குள் பிரித்து கொண்டு எழுதிய சொத்து விவரம் என்றால் சரிதான். வா.சா. ஆ. 1 பாக ஆவணத்தை அனுசரித்தே வா.சா.ஆ. 2 கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ. 9 ஆவண சொத்து விவரத்தில் தடம் குறித்த பகுதியில் "தென் கோட்டில் "என்ற சொல் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ஆவண சொத்து விவரத்தில்" என் பூமிக்கும் வடக்கும் தெற்கும் மயிலாத்தாளுக்கு பாத்தியப்பட்ட பூமிகளுக்கு கிழக்கு துளசியம்மாள் பூமிக்கும் மேற்கு இதன் மத்தியில் தென் வடல் லிங்ஸ் 12 , கிழமேல் லிங்ஸ் 166 இந்த அளவுள்ள பு ஏ 0.1 சென்ட் " என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) வா.சா. ஆ. 2 கிரய ஆவண சொத்து விவரத்தில் "தென்கோடு " என்ற சொல் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ஆவணம் என்ன பயன்பாட்டிற்காக என் தந்தை ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தடப்பிரச்சனைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது . அந்த தடம் குறித்து சாட்சியம் அளிக்க தான் நான் வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் கடைசியாக அந்த தடத்தை எப்போது பார்த்தேன் என்றால் 2 மாதங்களுக்கு முன்பு பார்த்தேன். நான் கிரயம் ஏற்படுத்தும் முன் தடத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

5) நான் கிரயம் கொடுக்கும் போது தடத்தில் எத்தனை தென்னை மரங்கள் இருந்தன என்றால் தடத்தில் தென்னை மரம் இல்லை. வழக்கு தடத்தின் இரு புறமும் 14 தென்னை மரங்கள் இருந்தன என்றும் ஆனால் நான் அதனை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் கொடுத்த க.ச.எண் 75/3 சொத்தின் மையப்பகுதிக்கு அடுத்த கீழ் புறத்தில் க.ச.எண் 75/5-ல் கிணறு உள்ளதா என்றால் கிணறு உள்ளது ஆனால் சரியாக மையப்பகுதிக்கு கிழக்கே இல்லை . அது அந்த இடத்திற்கு சற்று தெற்கே உள்ளது. மேற்படி கிணறு உள்ள பகுதியின் நேர்கோட்டின் தெற்கே க.ச.எண் 75/3 சொத்தில் எவ்வளவு பரப்பளவு உள்ளது என்றால் சுமார் 500 லிங்ஸ் இருக்கும் .

6) மேற்படி க.ச.எண் 75/5 -ல் உள்ள கிணற்றில் இருந்து தான் இவ்வழக்கு சொத்துக்கு மேற்கில் உள்ள க.ச.எண் 76 மற்றும் , க.ச.எண் 77 சொத்துகளுக்கு நீர்பாசனம் செல்கிறது என்றால் சரியல்ல. மேற்படி கிணற்றுக்கு அடுத்த மேல் புறத்தில் உள்ள தடம் வழியே தான் க.ச.எண் 76 மற்றும் , க.ச.எண் 77 சொத்துகளுக்கு நீர்பாசனம் குழாய்கள் மூலம் நாளது தேதி வரை செல்கிறது என்றும் ஆனால் நான் அதனை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள தென்கோட்டில் செல்லும் தடத்திற்கு தெற்கே உள்ள பகுதி யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுவும் வா.சா.ஆ. 2 ஆவணப்படி எங்களால் வாதிக்கு கிரயம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ. 2 ஆவண சொத்து விவரத்தில் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள தென்கோட்டில் செல்லும் தடத்திற்கு தெற்கே உள்ள பகுதி எல்லை விவரம் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தென் கோட்டில் தடம் இருப்பதாகவும் அதை தான்பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்ததாகவும் கூறுவது இவ்வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. உண்மையில் என் தந்தை வா.சா.ஆ. 9 ஆவணப்படி கிரயம் கொடுத்த தடமானது வழக்கு சொத்தின் நடுப்பகுதின் அமைந்துள்ளது என்றால் சரியல்ல.

8) நாங்களும் வாதியும் கூட்டாக சேர்ந்து கொண்டு வா.சா.ஆ.1 வா.சா.ஆ. 2 ஆவணங்களை தவறாக ஏற்படுத்திக் கொண்டு அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரயம் கேட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதனை எப்போது கேட்டார்கள் என்றால் மூன்றாம் நபர்கள் மூலம் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கேட்டார்கள் . என் தந்தை காலத்திலேயே பிரதிவாதிகள் தடமே போதுமானது என இருந்துவிட்டார்கள் என்றும் ஆனால் என்னிடம் வழக்கு சொத்தை கிரயம் கேட்டார்கள் என்று நான் சொல்வது இவ்வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அமைப்பு நன்கு தெரிந்திருந்தும் அவற்றை மறைத்து வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி